# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : குழந்தான் | Caste | : |
| S/o. | : ஆண்டியப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் சங்ககிரி வட்டம், அசிராமணி கிராமம், செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விறகுவெட்டும் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். வழக்கில் இறந்துபோன ஆனந்தனை எனக்குத் தெரியும். ஆனந்தனை போர்மன்னன் வெட்டிவிட்டதாக கூறினார்கள். அதனால் ஆனந்தன் இறந்துவிட்டார். நானும் செல்வராஜும் மாரியம்மன் கோவில் அருகே பேசிக்கொண்டிருந்தபோது போலிசார் அங்கு வந்தார்கள். ஆனந்தன்

இறந்துபோன இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் செல்வராஜும் கையெழுத்து செய்தோம். முதலில் செல்வராஜ் கையெழுத்து செய்தார். நான் 2வதாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். சம்பவ இடத்தில் ரத்தம் படிந்த காரை, ரத்தம் படியாத காரையை வெட்டி எடுத்தார்கள். அந்த காரையை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். ரத்தம் படிந்த காரை சா.பொ.3 ஆகும், ரத்தம் படியாத காரை சா.பொ.4 ஆகும். மேலும் கட்டிலில் இருந்த ரத்தம் படிந்த கயிறு மற்றும் ரத்தம் படியாத கயிறு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அவற்றை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். ரத்தம் படிந்த கயிறு சா.பொ.5 மற்றும் ரத்தம் படியாத கயிறு சா.பொ.6 ஆகும். மேலும் பக்கத்தில் இருந்த நியூஸ் பேப்பரையும் கைப்பற்றினார்கள். அதை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். மேற்படி நியூஸ் பேப்பர் சா.பொ.7 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் நான் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்துபோன பூசாரி ஆனந்தன் எனக்கு பங்காளி என்றால் சரி. மாரியம்மன் கோவில் அருகே நானும் செல்வராஜும் பேசிக்கொண்டிருந்தபோது போலிசார் எங்களை வந்து அழைத்து

சென்றார்கள் என்றால் சரி. சம்பவ இடத்திற்கு நாங்கள் போகும்போது பொது மக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. போலிசார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றும் தெரியாது. எத்தனை பக்கம் போலிசார் எழுதினார்கள் என்றும் தெரியாது. போலிசார் கையெழுத்து போட சொன்னார்கள், நான் கையெழுத்து போட்டேன். காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை. சம்பவ இடத்தை போட்டோ எடுத்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தேன் என்றால் 1.00 மணி இருக்கும். காவல்நிலையத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனந்தன் பங்காளி என்ற முறையில் அவருக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.